**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - *641 003*

*முனைவர் மா. ராஜவேல், Ph.D.*
*மக்கள் தொடர்பு அலுவலர்*
*கைப்பேசி: 94890 56730*

*தொலைபேசி: 0422 - 6611302*
*நிகரி: 0422 - 2431821*
*மின்னஞ்சல்:pro@tnau.ac.in*

---

*பெறுநர்,* *தேதி: 25.06.2026*
*ஆசிரியர்,*
*ஐயா,*

*கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.*

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இரத்த தான முகாம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் 22.06.2026 அன்று உலக குருதி கொடையாளர் தினத்தை முன்னிட்டு இரத்த தான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. சிங்காநல்லூர் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் இஎஸ்ஐ மருத்துவமனை உடன் இணைந்து இந்த முகாம் நடத்தப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக செயல் துணைவேந்தர் முனைவர் கா. சுப்ரமணியன், காலை 9.00 மணிக்கு இந்த முகாமை துவக்கி வைத்தார், சிங்காநல்லூர், இஎஸ்ஐ ரத்த வங்கியின் தலைமை மருத்துவர் டாக்டர் உமாசரோஜினி தனது குழுவினருடன் முகாமை நடத்தினார். பல்கலைக்கழக மாணவ, மாணவியர், கொடையாளர்கள், ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர்கள், ஓட்டுநர்கள் மற்றும் தொழிலாளர்கள் உட்பட 192 பேர் இரத்த தானம் செய்தனர்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***